2017 ஜூலை 4]

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில் தமிழை ஆட்சி மொழியாக, வழக்காடும் மொழியாக ஆக்க வேண்டுமென்பதற்காக இந்த அவையில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்றபோது ஏற்கெனவே தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தை அப்போது உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த நீதியரசர் திரு. ஷா அவர்கள்கூட ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் இதுகுறித்து 'எந்தப் பிரச்சினையும் எங்களுக்கு இல்லை' என்று தெரிவித்து, அவர்களும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார்கள். அவையில் நாம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினோம். உயர் நீதிமன்றமும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து, அவை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. மத்திய அரசிடம்தான் இன்னும் நிலுவையில் இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். மத்திய அரசு எப்படி இருக்கும் என்பது நமக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மற்றும் இந்த மாமன்றத்தினுடைய அனைத்து உறுப்பினர்களுடைய கோரிக்கையும் உயர் நீதிமன்றத்தில் தமிழை ஆட்சிமொழியாகவும், வழக்காடும் மொழியாகவும் கொண்டுவர வேண்டுமென்பதுதான். 4 மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றத்தில் அந்த மாநிலத்தினுடைய மொழி ஆட்சி மொழியாக எப்படி இருக்கின்றதோ, அதேபோன்று, தமிழ்நாடு உயர் நீதிமன்றத்தில் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உங்களுடைய ஒத்துழைப்புடன், கண்டிப்பாகத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

126—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***4805—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் மகளிருக்கான பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதியில் மகளிர் பலவகை தொழில்நுட்பக்கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. C.V. சேகர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு இதுகுறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டுக்கோட்டை தொகுதியில் கடந்த ஆண்டு பள்ளி இறுதித் தேர்வில் சுமார் 11,000 மாணவர்கள் தேர்வு எழுதினார்கள். அதிலே 10,000–க்கும் மேற்பட்டோர் தேர்ச்சி பெற்றுள்ளனர். அவர்கள் படிப்பதற்கு அந்தப் பகுதியில் பெண்களுக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தரவேண்டும். அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2017 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி கேட்டு தற்போது கலை மற்றும் அறிவியல் கல்லூரி அந்தப் பகுதியில் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைவரும் உயர் கல்வி பெறவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் தமிழகத்திலே புதிய கல்லூரிகளைத் தொடங்கி, மாணவர்களின் சேர்க்கை சதவிகிதத்தினைக் கூட்டுகின்ற வகையிலே திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கின்றார்கள். அந்தவகையில் பார்க்கும்போது மாணாக்கர்களுடைய சேர்க்கை சதவிகிதம் தமிழகத்தில் 44.3 சதவிகிதமாக இருந்தாலும், அதற்கு இணையாக மாணவிகளின் சேர்க்கை சதவிகிதம் 42.7 சதவிகிதமாக இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல், இன்றைக்கு ஒவ்வொரு மாவட்டத்தில் இருக்கக்கூடிய அரசுக் கல்லூரிகள், அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளின் சேர்க்கை சதவிகிதத்தினைப் பார்க்கும்போது, பட்டுக்கோட்டையினைப் பொறுத்தவரையில், மாணவர்களின் தேவைக்கேற்ப கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே, வருகின்ற காலகட்டங்களில் மாணவர்களின் சேர்க்கை கூடுதலாக இருப்பின் அரசு பரிசீலனை செய்து, அங்கு புதிய கல்லூரி தேவைப்படின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசானது ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

திரு. C.V. சேகர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்து, நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன்.*